**DEPOSITION OF WITNESS**

**Chapter XXIII Code of Criminal Procedure**

**In the Court of Judicial Magistrate No. II, Usilampatti**

**Case No. C.C - 136/2021**

**Deposition of Witness for Prosecution : P.W. 1**

| | | | |
|---|---|---|---|
| Name | : **படிவுத்தேவர்** | Caste | : |
| Father/Husband Name | : **நல்லுத்தேவர்** | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

**(A1 Present)**

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1969 of the day of 21.05.2025**

**குறுக்கு விசாரணை**

எனக்கு எழுத, படிக்க தெரியாது. சம்பவ நடந்த இடம் எனக்குதான் சொந்தமானது என்று காட்ட ஆவணங்கள் எதுவும் போலீசார் விசாரணையில் கொடுத்தேனா என்றால் இல்லை. போலீசார் எனது புகாரை நிராகரித்தபோது, மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளரிடம் புகார் மனு அனுப்பினேனா என்றால் இல்லை. மதுரை வருவாய் மாவட்ட நீதிமன்றத்தில் நான் எதிரிக்கு சாதகமாக வருவாய் கோட்டாச்சியர் அளித்த தீர்ப்பை எதிர்த்து மேற்படி மேல் முறையீடு செய்தேன் என்றால் சரிதான். மேற்படி மேல்முறையீட்டில் உரிமையியல் நீதிமன்றத்தில் நிவாரணம் தேடிகொள்ளும்படி முடித்துவைக்கப்பட்டது என்றால் சரிதான். உசிலம்பட்டி, முன்சீப் மற்றும் சார்பு நீதிமன்றத்தில் இருதரப்பும் பதிவு செய்த உரிமையியல் வழக்குகள் நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். நான் முதல் விசாரணையிலும்,

வாக்குமூலத்திலும் 1ஆம் எதிரி என்னை அடித்ததாக, சொன்ன நேரத்தில் அவர் பேரையூர் தாலுக்காக அலுவலகத்தில் பகுதிநேர பணியில் இருந்தார் என்றால் சரியல்ல. அவர் சம்பவத்திலேயே அன்றைய தினத்தில் ஈடுபடவில்லை என்றால் சரியல்ல. எதிரி ராஜா கையில் அடித்ததாக நான் என்னுடைய புகாரில் கூறவில்லை என்றால் சரியல்ல. நான் கொடுத்த புகாரில் வழக்கு பதிவு செய்யப்பட்ட முதல் விசாரணையில் சம்பவ இடமானது வரைபடத்தில் 1ஆம் எதிரியின் காலியிடம் காண்பிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நாங்கள் சொத்துகளுக்கு வாரிசுதாரர்கள் என்று இதுவரை எந்த நீதிமன்றத்திலும் எங்களுக்கு சாதகமாக தீரப்பு அளிக்கவில்லை என்றால் சரியல்ல. நானும் எதிரியும் முத்ததாரர் இளையதாரர் மக்கள் என்றால் சரிதான். சொத்துக்காக எதிரிகளையும் அவரது குடும்பதாரர்களையும் பழிவாங்கவேண்டும் என்ற நோக்கத்தோடு தானாக எங்கையோ எப்படியோ கீழே விழுந்த காயத்தை வைத்துகொண்டு பொய்யான புகாரை எதிரிகளின் மீது கொடுத்தேன் என்றும், நான் வயதானவர் என்பதால் போலீசார் வழக்கை பதிவு செய்தார்கள் என்றாலும், விசாரணையின்போது நான் கொடுத்த புகாரில் உண்மைதன்மை இல்லை என்பதால் அதை தள்ளுபடி செய்துள்ளனர் என்றால் சரியல்ல. 2015 ஆம் ஆண்டு 1ஆம் எதிரி தன்னுடைய மனைவிக்கு தான செட்டில்மெண்ட் பத்திரம் மூலம் எழுதிகொடுத்துள்ளார் என்றால் அது எனக்கு பாத்தியப்பட்ட சொத்தை எழுதி கொடுத்துள்ளார். மேற்படி பத்திரத்தை ரத்து செய்யகோரி 2019 ஆம் ஆண்டு வழக்கு தொடர்ந்துள்ளேன் என்றால் சரிதான். எதிரிகள் யாரும் என்னையோ எனது மகளையோ அடிக்கவோ, தாக்கவோ இல்லை என்றாலும் எதிரிகள் மீது முன்விரோதம் காரணமாக பொய் புகார் கொடுத்து பொய்சாட்சியம்

அளிக்கிறேன் என்றால் சரியல்ல. என் தரப்பு சாட்சிகள் எனக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறார்கள் என்றால் சரியல்ல.

G SATHIA NARAYANAN

Digitally signed by G SATHIA NARAYANAN
Date: 2025.05.21 15:25:18 +0530